රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු හා අධිකරණ අමාත්‍යාංශය
அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION, HOME AFFAIRS AND JUSTICE

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07,ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:(94) 011- 2694560 Telephone
ෆැක්ස් தொலைநகல்:(94) 011- 2692254 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/14/01

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி: / Date: 2018.12.06

**அனைத்து அமைச்சின் செயளாலர்கள்**
**நிறுவனத் தலைவர்கள்**
**மாவட்ட செயலாளர்களுக்கு**

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III அலுவலர்களை தரம் II இற்கு தரமுயர்த்துதல்</u>**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களை தரம் II இற்கு தரமுயர்த்தலுக்காக தேவைப்படும் தகைமைகளை பூர்த்தி செய்ததன் பின் இணைப்பிலுள்ள தரம் II இற்கான தரமுயர்த்துதல் பற்றிய முன்னோடி விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து அவ் அலுவலரது நாளதுவரைபடுத்தப்பட்ட வரலாற்றுத் தாளின் உறுதி செய்யப்பட்ட பிரதியுடன் இணைத்து நிறுவனத் தலைவரது சிபாரிசு சகிதம் எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

02. அத்துடன் தகுதிகூர்நிலைக் காலத்தைப் பூர்த்தி செய்த தினத்திற்கு முன் வினைதிறமைகாண் தடைதாண்டல் பரீட்சையை பூரணப்படுத்தாத அலுவலர்கள் தொடர்பில், உரிய காலப்பகுதிக்குள் அனைத்து வினைதிறமைகாண் தடைதாண்டல் பரீட்சைகளும் நடாத்தப்பட்டுள்ளனவா எனவும் அவ் அலுவலர் வினைதிறமைகாண் தடைதாண்டல் பரீட்சையை உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யாதது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பற்றியும் எனக்கு அறியத்தறுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

03. அரச நிர்வாக சுற்றறிக்கை 05/2018 இற்கமைவாக 10 வருடத்திற்கு மேற்பட்ட எனினும் 20 வருடத்தை விட குறைந்த சேவைகாலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக்குறிப்பில் உள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் 2011.08.01 ஆந் திகதிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கு உள்ளீர்க்கப்படுவார்கள். அதன்போது உள்ளீர்க்கப்படும் தினத்திற்கு 10 வருடத்திற்கு மேற்பட்ட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களிற்கு அப் பத்து (10) வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலமானது தரம் I இற்கான தரமுயர்த்தலின் போது கருத்திற் கொள்ளப்படும் என அறியத்தருகின்றேன்.

**(மேற்குறித்த ஆவணங்களை அனுப்புகையில் அவ் அலுவலர்களது நியமனக்கடித இலக்கத்தை (CS/DOS/A/XXXXX) குறிப்பிட்டு அனுப்பவும்)**

**ஒப்பம்/. கே.வீ.பீ.எம்.ஜே. கமகே**
**இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

இணைப்பு

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III அலுவலர்களை தரம் II இற்கு பொதுவான செயற்றிறன் அடிப்படையில் தரமுயர்த்தலுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்.

1. முதலெழுத்துக்களுடனான பெயர் :
2. முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர் :
3. பிறந்த திகதி :
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
5. அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளீர்ப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமன இலக்கம் :
6. முதல் நியமனத்திகதி :
7. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :
8. வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திய திகதி மற்றும் பரீட்சை சுட்டெண் :
9. தரம் III இல் 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த திகதி :
10. தற்போதைய சேவை நிலையம் : ............

.................................. ஆந் திகதி தொடக்கம் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கு தரமுயர்த்துமாறு வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| .................................. | ………………………………………………………............ |
| திகதி | விண்ணப்பதாரியின் கையொப்பம் |

---

எனது இல : ..........................................
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
திரு/திருமதி/செல்வி ...................................................
இவ் அலுவலகத்தில் கடமையாற்றுவதுடன்,

1. .................................................... ஆந் திகதிக்கு 10 வருட உயிர்ப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும்,
2. உரித்த வேதன ஏற்றம் 10 இனை சம்பாதித்துள்ளார் எனவும்,
3. அனுமதியளிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு திட்டத்தின் அடிப்படையில் தரமுயர்த்தப்பட்ட தினத்திற்கு உடன் முன்னுள்ள 10 வருட திருப்திகரமான செயற்றிறனை அல்லது அதைவிட உயர்ந்த செயற்றிறனை வெளிக்காட்டியுள்ளார் எனவும்,
4. அப் 10 வருட காலத்திற்குள் அரைச் சம்பள / சம்பளமற்ற விடுமுறை எண்ணிக்கை .......................................... எனவும்/ அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை எனவும்,
5. அக்காலத்திற்குள் எந்தவொரு தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிரந்த) உள்ளாகவில்லை எனவும்,
6. அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை/ எதிர்காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான எதிர்பார்ப்பு இல்லை எனவும்,
7. தரம் III இற்குரிய வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார் எனவும்,
8. .......................................... ஆந் திகதி வலுப்பெறும் வகையில் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், குறிப்பிடுகிறேன்.

இவ் அலுவலர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளபடியால் ............................................ ஆந் திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவதை சிபாரிசு செய்கிறேன்.

நிறுவனத் தலைவரது ஒப்பம் :
..............................................
பெயர் :
திகதி
பதவிப் பெயர் :
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)